# D E P O S I T I O N O F W I T N E S S

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.42/2024

**P.W**. 1(LW1)

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பாபு |
| Father/Husband Name | : | திரு. நம்பியப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.05.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது சென்னை தண்டையார்பேட்டையில் குடியிருந்து சொந்தமாக கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன பிரித்தா என்னுடைய மகள் ஆவார்.

2) கடந்த 22.10.2023ம் தேதி என்னுடைய மகள் அவருடைய நண்பர்களுடன் அவரது நண்பரின் திருமணத்திற்காக இ சி ஆர் சாலையிலிருந்து செங்கல்பட்டு நோக்கி சென்றுக் கொண்டிருந்த போது சுமார் 10.30 மணியளவில் விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். கேள்விப்பட்டு நான் ஓம்.எம்.ஆர் சாலையில் உள்ள காவல் நிலையத்திற்கு சென்றேன். கல்பாக்கம் அனுமின்நிலைய மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை சிகிச்சைக்காக எனது மகளின் நண்பர்கள் அனுமதிக்கப்பட்டிருந்ததாக சொன்னார்கள். எனது

மகள் பிரித்தா விபத்தில் இறந்துவிட்டதாக கூறி செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருந்தார்கள். நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அங்கு என் மகளின் இறந்துபோன உடலை பார்த்தேன். பின்னர் 22.10.2023 அன்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார் ஆகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

என் மகள் யாருடைய திருமணத்திற்கு சென்றார் என்கிற விவரம் எனக்கு தெரியாது. நண்பரின் திருமணம் என்று சொன்னார். எந்த இடத்தில் நடைபெறும் திருமணத்திற்கு சென்றார் என்கிற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என் மகளுக்கு விபத்து ஏற்பட்டது என்று எனக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் என் மகளின் நண்பரான ரெஜினா என்பவர் தகவல் சொன்னார். நான் கொடுத்த புகாரில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரை என் மாமா மகன் எழுதினார். இந்த வழக்கின் புகாரை நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் சொல்லி தான் விபத்து குறித்து எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.42/2024

**P.W**. 2(LW2)

| | | |
|---|---|---|
| Name | : | திரு.தனஞ்ஜெயன் |
| Father/Husband Name | : | திரு. பாபு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.05.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது சென்னை தண்டையார்பேட்டையில் குடியிருந்து சொந்தமாக கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன பிரித்தா என்னுடைய தங்கை ஆவார்.

2) கடந்த 22.10.2023ம் தேதி என்னுடைய தங்கை அவருடைய நண்பர்களுடன் அவரது நண்பரின் திருமணத்திற்காக இ சி ஆர் சாலையிலிருந்து பாண்டிச்சேரி நோக்கி நண்பர்களுடன் இரு சக்கர வாகனத்தில் சென்றுக் கொண்டிருந்த போது இளையனார் குப்பம் அருகே விஜய் என்பவர் வாகனத்தை அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் ஓட்டிச் சென்று விபத்து ஏற்பட்டது. அப்போது 11.30 மணியளவில் அருகில் இருந்த போலிசார் எனக்கு போன் மூலம் என் தங்கைக்கு விபத்து எற்பட்டு இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். அருகில் இருந்த கல்பாக்கம்

அனுமின் நிலைய மருத்துவமனையில் என் தங்கை இறந்துவிட்டதாக சொன்னார்கள் என்று எனக்கு தகவல் சொன்னார்கள். அவரை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளதாக சொன்னார்கள். நாங்கள் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்று என் தங்கையின் உடலை பார்த்தேன். இது சம்மந்தமாக சட்ராஸ் காவல் நிலையத்தில் எனது அப்பா புகார் கொடுத்தார். நான் அவருடன் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

விபத்து குறித்து 11.30 மணியளவில் போலிசார் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு பிரேத விசாரணை மேற்கொண்டார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. சுமார் 4.30 மணியளவில் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்றேன். விபத்து குறித்து கேள்விப்பட்டு நேரடியாக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். விபத்து எப்படி நடைபெற்றது என்கிற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இறந்துபோன நபர் என்னுடைய தங்கை என்பதால் நஷ்டஈடுவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.